

பள்ளி விடுமுறை நாளில் சிறுவன் மாணிக்கம் அவசரமாக எங்கோ சென்று கொண்டிருந்தான். சிறுவன் மாணிக்கம் தெருவில் வேகமாக நடந்து செல்வதைக் கவனித்த அவன் நண்பர்கள் எல்லோரும் மாணிக்கத்தின் குறுக்கே ஓடி வந்தார்கள்.

**“மாணிக்கம் இன்று நமக்கு பள்ளி விடுமுறை நாள்தானே! நீ எங்களோடு விளையாட வருவதை விட்டுவிட்டு வேறு எங்கோ அவசரமாக செல்கின்றாயே!”** என்று கோபத்துடன் கேட்டார்கள். உடனே மாணிக்கம் **“நண்பர்களே கோபப்படாதீர்கள். நாம் விளையாட்டில் ஆர்வமாக இருக்க வேண்டியதுதான். ஆனால் எந்த நேரத்திலும் விளையாட்டில் ஆர்வமாக இருக்கக்கூடாது, அது நம் வாழ்க்கையையே பாதிப்படையச் செய்துவிடும்.**



**அதனால் விளையாடுவதை சற்று குறைத்துவிட்டு நம் அறிவுக்கும் வேலை கொடுக்க வேண்டும்”** என்று கூறினான்.
மாணிக்கத்தின் பேச்சு நண்பர்களுக்குப் புரியவில்லை. அவர்கள் குழப்பத்துடன் மாணிக்கத்தைப் பார்த்தார்கள். உடனே மாணிக்கம் **“நண்பர்களே! நாம் வாழ்க்கையில் சராசரி நிலையிலேயே ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம் என்று இருக்கக் கூடாது. நாம் வாழ்க்கையில் ஏதாவது சாதனை செய்ய வேண்டும். அப்போது தான் நாம் பிறந்ததற்கே ஓர் அர்த்தம் இருக்கும்”** என்று கூறினான்.
மாணிக்கத்தின் பேச்சு மீண்டும் நண்பர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவே அவர்கள் மாணிக்கத்தைப் பார்த்து “**நண்பனே! நீ சொல்வது ஒன்றும் எங்களுக்குச் சரியாக விளங்கவில்லை. நாங்கள் எல்லோரும் புரிந்து கொள்ளும்படியாகத் தெளிவாகக் கூறேன்”** என்றார்கள்.
அதனைக் கேட்ட மாணிக்கம் **“நண்பர்களே! நாம் வாழ்க்கையில் வெற்றி பெற அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டும். அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டுமானால் நல்ல புத்தகங்களைத் தேடிச் சென்று படிக்க வேண்டும்.**
**நமது ஊரில் இருக்கின்ற நூல் நிலையத்தில் ஏராளமான சிறந்த நீதி நூல்கள் இருக்கின்றன. அவற்றை நாம் படித்தால் நம்மிடையே நற்பண்புகள் வளரும்.**
**அந்த நற்பண்புகள் நமது உயர்ந்த லட்சியங்களுக்கு அஸ்திவாரமாக அமைந்து விடும். மேலும், உலகத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றையெல்லாம் படித்தால் நமக்குள்ளேயே தன்னம்பிக்கை வளரும். நம்மாலும் அரிய பெரிய செயல்களைச் செய்ய முடியும் என்பதை நீதி நூல்கள் நமக்கு நல்லவிதமாக**

**உணர்த்தும்”** என்று கூறினான். மாணிக்கத்தின் நண்பர்களின் முகங்கள் எல்லாம் தெளிவடைந்தன.




அவர்கள் ஆவலுடன் மாணிக்கத்தைப் பார்த்து “**நண்பனே! நீ கூறியதுபோல் நாங்களும் அறிவுக்கு வேலை கொடுக்க விரும்புகிறோம். இப்போதே உன்னோடு நாங்களும் நூல் நிலையத்திற்கு வருகிறோம்.**
**நீதி நூல்கள் பல படித்து நமது நற்பண்புகளை வளர்த்து நம்மாலும் ஒப்பற்ற சாதனைகளைப் படைக்க முடியும் என்பதை நம் ஊர் மக்கள் மத்தியில் நிரூபிப்போம்”** என்று உறுதியுடன் கூறினார்கள்.
மாணிக்கம் உடனே தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு நூல் நிலையத்திற்குப் புறப்பட்டான்.